# இலங்கையில் இரண்டாம் மொழியாகத் தமிழ்க் கற்பித்தலில் பேச்சு வழக்கு சார்ந்த சிக்கல்களும் தீர்வுகளும்

முனைவர். கலா சந்திரமோகன்
முதுநிலை விரிவுரையாளர்
மொழி கற்கைகள் துறை
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

# இலங்கையில் இரண்டாம் மொழியாத் தமிழ்க் கற்பிக்கும் செயற்பாடுகள்

1. சிங்களப் பாடசாலைகள் (Sinhala Schools)
2. தேசிய கல்வி நிறுவகம் (National Institute of Education)
3. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (National Institution of Language Education and Training)
4. அரசகரும மொழிகள் திணைக்களம் (Dept. of Official Languages)
5. பல்கலைக்கழகங்கள் (Universities)
6. தனியார் நிறுவனங்கள் (Private Institutions)

- கலைத்திட்டம் தயாரித்தல்
- பாடத்திட்டம் தயாரித்தல்
- பாடநூல்கள் வடிவமைத்தல்
- ஆசிரியர்களுக்குரிய வழிகாட்டிகள் தயாரித்தல்
- ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல்
- கற்பித்தல்

சிங்கள மாணவர்களுக்கு இரண்டாம் மொழியாகத் தமிழ்க் கற்பிப்பதற்கு எந்த மொழி மூலத்தைப் பயன்படுத்தலாம்?

தமிழ்

சிங்களம்

# அடிப்படை மொழித் திறன்கள் - கற்பித்தல்



# எழுத்து வழக்கு மூலம் பேச்சு வழக்கைக் கற்பித்தல்

- தமிழ் மொழியின் கட்டமைப்பு குலைந்துவிடக் கூடாது.
- தமிழ் மொழியின் செம்மொழித் தன்மையைப் பாதுகாத்தல் வேண்டும்
- சரியான தமிழ்மொழி கற்பிக்கப்பட வேண்டும்
- பேச்சு வழக்கானது கொச்சைத் தமிழ். ஆகவே எழுத்து வழக்கிலேயே தமிழ் மொழியைக் கற்பித்தல் வேண்டும்
- பேச்சு வழக்கினை எழுத்து வழக்கு மூலம் கற்பிக்கின்ற பொழுது மாணவர்களுக்கு எழுத்து வழக்கைக் கற்பித்தல் இலகுவானச் செயற்பாடாக அமையும்.

# இலங்கையில் வழக்கிலுள்ள தமிழ்ப் பேச்சு வழக்குகள்

## (அ). யாழ்ப்பாணத் தமிழ்ப் பேச்சு வழக்கு
## உயிர் ஒலிகளின் உச்சரிப்பு

அ, ஆ, இ, ஈ, எ, ஏ உயிர் ஒலிகளுக்கு இவ்விரு உச்சரிப்புக்கள் உள்ளன.

அ - அம்மா, அப்பம், அறிவு | ஆ - ஆடு, ஆறு, ஆபத்து

அ - அன்பு, மரம், அலகு | ஆ - ஆசிரியர்,நாய்,காரணம்

இ - இலை, இஞ்சி, இனிமை | ஈ - ஈசல், நீலம், நீங்கள்

இ - இடுப்பு, இளமை, இழப்பு | ஈ - ஈழம், நீளம், ஈட்டி

எ - எலும்பு, என், நெருப்பு | ஏ - ஏலம், தேசம், வேலை

எ - எழும்பு, எண், எட்டு | ஏ - ஏணி, கேள்வி, ஏடு

| யாழ்ப்பானப் பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| நான் | நான் |
| இவ (பெண்பால் ஒருமை) | இவள் |
| இவளவ (பெண்பால் பன்மை) | இவர்கள் |
| இவையள், இவங்கள் (பன்மை) | இவர்கள் |
| அவையள், அவங்கள் (பன்மை) | அவர்கள் |
| பெட்டை | சிறுமி |
| பெடியன் | சிறுவன் |
| என்ர | என், எனது, என்னுடைய |
| அவன்ர | அவனது, அவனுடைய |
| வந்தனான் | வந்தேன் |
| செய்தனாங்கள் | செய்தோம் |
| போன்னீ | போனாய் |
| வாங்கோ | வாருங்கள் |
| இருங்கோ | அமருங்கள் |
| போட்டு வாங்கோ | போய் வாருங்கள் |
| இஞ்சாருங்கோ | இங்கே பாருங்கள் |
| ஒழும்புங்கோ | எழும்புங்கள் |
| சொன்னவங்கள் | சொன்னார்கள் |
| பேந்து | பிறகு |

# நீர் என்ற சொல்லின் பயன்பாடு

- ‘நீர்’ மற்றும் ‘உம்மட’ போன்ற முன்னிலை ஒருமைகள், வயதில் சிறியவர்கள், நண்பர்கள் போன்றவர்களுடன் உரையாடும்பொழுது பயன்படுத்தப்படுகின்றன

  உதாரணம்:

  நீர் இஞ்ச வாரும்.

  நீர் எங்க போன்னீர்?

  உம்மட புத்தகத்த எங்க வச்சனீர்?

- ‘உது’ என்ற சுட்டுச் சொல் வழக்கிலுள்ளது.

  உதாரணம்:

  உது உம்மட புத்தகமோ?

# (ஆ). மட்டக்களப்பு தமிழ்ப் பேச்சு வழக்கு

| மட்டக்களப்புத் தமிழ் பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| கண்டு | கன்று |
| சாவல் | சேவல் |
| சள்ளு | தொந்தரவு |
| நாசமறுப்பு | தொல்லை |
| பறவாதி | பேராசைக்காரன் |
| பிசினி | பெரும் உலோபி |
| ஏலா | இயலாது |
| ஒள்ளுப்பம் | சிறிதளவு |
| வச்ச | வைத்து |
| வந்தன் | வந்தேன் |
| வருவன் | வருவேன் |
| சொன்னாவு | சொன்னாள் |
| போனாவு | போனாள் |
| இறிக்கி | இருக்கின்றது |

# (இ). மலையகத் தமிழ்ப் பேச்சு வழக்கு

| மலைகப் பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| மொகோ | முகம் |
| கண்ணு | கண் |
| ஆக்கு | சமை |
| பாஞ்சா(ன்) | பாய்ந்தான் |
| அம்மா வருது. | அம்மா வருகிறார். |
| அப்பா வருது. | அப்பா வருகிறார். |
| பூன வருது. | பூனை வருகின்றது. |
| அம்மா சொன்னுச்சி. | அம்மா சொன்னார். |
| மாமா வந்துச்சி. | மாமா வந்தார். |
| மாடு வந்துச்சி. | மாடு வந்தது. |

# (ஈ). முஸ்லிம்களின் தமிழ்ப் பேச்சு வழக்கு

| முஸ்லிம்களின் பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| உம்மா | அம்மா |
| வாப்பா | அப்பா |
| காக்கா | அண்ணா |
| அப்பா | தாத்தா |
| சாச்சி | சின்னம்மா |
| சாச்சா | சித்தப்பா |
| வூடு அல்லது ஊடு | வீடு |
| ஒசக்க | மேலே |
| ஈந்து | இருந்து |
| பு(b)ளுந்த | விழுந்தது |
| சென்ன | சொன்னீர்கள் |
| செல்லச்ச | சொல்லும்பொழுது |

# (உ). உடப்பூர் பேச்சு வழக்கு

| உடப்பூர் பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| வந்தாழுவோ (பெண்கள்) | வந்தார்கள் |
| போறாளுவோ (பெண்கள்) | போகிறார்கள் |
| போறிய | போகிறீர்கள் |
| வாறிய | வருகிறீர்கள் |
| கீழ குந்து | கீழே உட்கார் |
| சொல்லச்ச | சொல்லும்பொழுது |
| வாந்து விடுங்க | சீவி விடுங்க |

# இலங்கையில் பேச்சு வழக்கு எவ்வாறு கற்பிக்கப்படுகின்றது?

பேச்சு வழக்கு, எழுத்து வழக்கில் கற்பிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| என் பெயர் ரவி. | எனது பெயர் ரவி. | என்னுடைய பெயர் ரவி. |
| உன் பெயர் ரவி, | உனது பெயர் ரவி. | உன்னுடைய பெயர் ரவி. |
| அவன் பெயர் ரவி. | அவனது பெயர் ரவி. | அவனுடைய பெயர் ரவி. |
| அவர் பெயர் ரவி. | அவரது பெயர் ரவி. | அவருடைய பெயர் ரவி. |
| அவள் பெயர் மலர். | அவளின் பெயர் மலர். | அவளுடைய பெயர் மலர். |
| | | |
| அம்மாவின் பெயர் | அம்மாவினது பெயர் | அம்மாவினுடைய பெயர் |
| மாமியின் பெயர் | மாமியினது பெயர் | மாமியினுடைய பெயர் |
| | | |
| இது யார் பெயர்? | இது யாரினது பெயர்? | இது யாருடைய பெயர்? |
| இது யார் குடை? | இது யாரினது குடை? | இது யாருடைய குடை? |
| | | |
| இது எதன் மூடி? | இது எதனது மூடி | இது எதனுடைய மூடி? |

25 ஆசிரியரின் உதவியோடு சொற்களைப் பயன்படுத்திக் கதைக்கப் பழகவும்.
ගුරුවරයාගේ සහාය ඇතිව වචන භාවිත කර කතා කිරීමට පුහුණු වෙමු.

**- ரை, -இன்ரை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான் | என் | + | ரை | → | என்ரை |
| நாங்கள் | எங்கள் | + | இன்ரை | → | எங்களின்ரை |
| நீ | உன் | + | ரை | → | உன்ரை |
| நீங்கள் | உங்கள் | + | இன்ரை | → | உங்களின்ரை |
| அவர் | அவர் | + | இன்ரை | → | அவரின்ரை |
| அவ | அவ | + | இன்ரை | → | அவவின்ரை |
| அவையள் | அவையள் | + | இன்ரை | → | அவையளின்ரை |
| அது | அது | + | இன்ரை | → | அதின்ரை |
| அதுகள் | அதுகள் | + | இன்ரை | → | அதுகளின்ரை |

ஆசிரியரின் உதவியோடு கீழ்வரும் சொற்களைப் பயன்படு
வாக்கியங்களை அமைக்கப் பழகவும்.

# இவ்வாறு கற்பிக்கலாம்

| | | | | |
|---|---|---|---|---|
| என் | + | ட | = | என்ட |
| எங்க | + | ட | = | எங்கட |
| உங்க | + | ட | = | உங்கட |
| அவன் | + | ட | = | அவன்ட |
| அவ | + | ட | = | அவட |
| அவர் | + | ட | = | அவர்ட |
| அம்மா | + | ட | = | அம்மாட |
| மாமி | + | ட | = | மாமிட |
| யார் | + | ட | = | யார்ட? |
| எது | + | ட | = | எதுட? |

உதவியோடு "அ" பகுதியுடன் "ஆ" பகுதியை இணைத்து உச்சரித்துப் பழகுவோம்.

ගුරුවරයාගේ සහාය ඇතිව පහත ඇති "අ" කොටසේ ඇති වචන හා "ආ" කොටසේ වචන ගළපා උච්චාරණය පුහුණු වෙමු.

- ஓடை

| அ | ஆ |
| --- | --- |
| அம்மாவோடை | வாங்கோ. |
| தங்கச்சியோடை | போங்கோ. |
| புத்தகத்தோடை | வாங்கோ. |
| உங்களோடை | கோவம். |
| அவரோடை | கதைக்க வேணும். |
| நாயோடை | விளையாட வேண்டாம். |
| என்னோடை | கோவிக்க வேண்டாம். |
| காசோடை | கட்டாயம் வாங்கோ. |
| நல்ல செய்தியோடை | நாளைக்கு வாங்கோ. |

2.2 ஆசிரியரின் உதவியோடு உச்சரித்துப் பழகுவோம்.

# இவ்வாறு கற்பிக்கலாம்

| | | | | |
|---|---|---|---|---|
| என் | + | ஓட | = | என்னோட |
| எங்க | + | ஓட | = | எங்களோட |
| உங்க | + | ஓட | = | உங்களோட |
| அவன் | + | ஓட | = | அவனோட |
| அவ | + | ஓட | = | அவவோட |
| அவர் | + | ஓட | = | அவரோட |
| அம்மா | + | ஓட | = | அம்மாவோட |
| மாமி | + | ஓட | = | மாமியோட |
| யார் | + | ட | = | யாரோட? |
| எது | + | ட | = | எதோட? |

2.9 ஆசிரியரின் உதவியோடு சரியாக உச்சரித்து சொற்களை இணைத்து கதைக்கப் பழகுவோம்.
ගුරුවරයාගේ සහාය ඇතිව නිවැරදිව උච්චාරණය පුහුණු වෙමු.

-ட்டை- , -அட்டை- , -இட்டை-
(-ගෙන්), (-ට), (-ළඟ)

| | | | | |
|---|---|---|---|---|
| நான் | என் | + அட்டை | = என்னட்டை | මගෙන් |
| நாங்கள் | எங்கள் | + இட்டை | = எங்களிட்டை | අපෙන් |
| நீ | உன் | + அட்டை | = உன்னட்டை | නුඹෙන් |
| நீங்கள் | உங்கள் | + இட்டை | = உங்களிட்டை | ඔයාලාගෙන් |
| அவர் | அவர் | + இட்டை | = அவரிட்டை | ඔහුගෙන් |
| அவ | அவ | + வ் + இட்டை | = அவவிட்டை | ඇයගෙන් |
| அவையள் | அவையள் | + இட்டை | = அவையளிட்டை | |
| அவங்க | அவங்கள் | + இட்டை | = அவங்களிட்டை | |
| அவக | அவகள் | + இட்டை | = அவகளிட்டை | |
| அது | அது | + ட்டை | = அதிட்டை | ඌගෙන් |
| அதுகள் | அதுகள் | + இட்டை | = அதுகளிட்டை | උන්ගෙන් |
| அம்மா | அம்மா | + ட்டை | = அம்மாட்டை | අම්මගෙන් |
| அப்பா | அப்பா | + இட்டை | = அப்பாட்டை | තාත්තාගෙන් |
| தம்பி | தம்பி | + ய் + இட்டை | = தம்பியிட்டை | මල්ලිගෙන් |

கேளுங்கோ

# இவ்வாறு கற்பிக்கலாம்

| | | | | |
|---|---|---|---|---|
| என் | + | ட்ட | = | என்னட்ட |
| எங்கள் | + | ட்ட | = | எங்கள்ட்ட |
| உங்கள் | + | ட்ட | = | உங்கள்ட்ட |
| அவன் | + | ட்ட | = | அவன்ட்ட |
| அவ | + | ட்ட | = | அவட்ட |
| அவர் | + | ட்ட | = | அவர்ட்ட |
| அம்மா | + | ட்ட | = | அம்மாட்ட |
| மாமி | + | ட்ட | = | மாமிட்ட |
| யார் | + | ட்ட | = | யார்ட்ட? |
| எது | + | ட்ட | = | எதுட்ட? |

அனுப்பேல்லையெண்டால் யැව්වෙ නැත්නම්/ යවන්නෙ නැත්නම්

**2.2 ஆசிரியரின் உதவியுடன் உச்சரித்துப் பழகுவோம்.**
ගුරුවරයාගේ සහාය ඇතිව උච්චාරණය පුහුණු වෙමු.

- ஏக்கை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| போ | → | போக | + | ஏக்கை | = | போகேக்கை | යනකොට |
| வா | → | வர | + | ஏக்கை | = | வரேக்கை | එනකොට |
| குடி | → | குடிக்க | + | ஏக்கை | = | குடிக்கேக்கை | බොනකොට |
| எடு | → | எடுக்க | + | ஏக்கை | = | எடுக்கேக்கை | ගන්නකොට |
| தா | → | தர | + | ஏக்கை | = | தரேக்கை | දෙනකොට |
| அனுப்பு | → | அனுப்ப | + | ஏக்கை | = | அனுப்பேக்கை | යවනකොට |
| போடு | → | போட | + | ஏக்கை | = | போடேக்கை | දානකොට |
| மூடு | → | மூட | + | ஏக்கை | = | மூடேக்கை | වහනකොට |
| எழும்பு | → | எழும்ப | + | ஏக்கை | = | எழும்பேக்கை | නැගිටිනකො |
| ஓடு | → | ஓட | + | ஏக்கை | = | ஓடேக்கை | දුවනකොට |

# இவ்வாறு கற்பிக்கலாம்

போகும் + போது = போகும்போது

வரும் + போது = வரும் போது

குடிக்கும் + போது = குடிக்கும் போது

எடுக்கும் + போது = எடுக்கும் போது

தரும் + போது = தரும் போது

அனுப்பும் + போது = அனுப்பும் போது

போடும் + போது = போடும் போது

மூடும் + போது = மூடும் போது

எழும்பும் + போது = எழும்பும் போது

ஓடும் + போது = ஓடும் போது



ගුරුවරයාගේ සහාය ඇතිව කියවමු.

01 வணக்கம் ஐயா...

02 வணக்கம் அம்மா... இருங்கோ. என்ன விசயமாய் வந்தநீங்கள்?

03 என்ரை அடையாள அட்டையை துலைச்சுப் போட்டன்

04 எங்கை துலைச்சநீங்கள்?

05 பஸ்ஸிலை போகேக்கை எங்கேயோ விழுந்துட்டுது.

06 எந்த பஸ்ஸிலை?

07 கிளிநொச்சி பஸ்ஸிலை?

08 உங்களின்ரை முழுப்பேர் என்ன?

09 கந்தசாமி யோகேஸ்வரி.

10 வயது...?

11 நாப்பத்தி மூண்டு ஐயா

12 விலாசத்தைச் சொல்லுங்கோ.

13 43/15, பிரதான வீதி, கிளிநொச்சி.

14 எப்ப துலைச்சநீங்கள்?

15 நேற்று பின்னேரம் அஞ்சு மணிக்கு.

16 கொஞ்சம் இருங்கோ. பெரிய ஐயா வந்தவுடன முறைப்பாட்டுப் பிரதியை தாறன்.

17 சரி ஐயா.

# வினைச் சொற்கள்

வாங்கோ, போங்கோ, தாங்கோ, போடுங்கோ, இருங்கோ
குடியுங்கோ, சிரியுங்கோ, வையுங்கோ, படியுங்கோ

## இவ்வாறு கற்பிக்கலாம்

வாங்க, போங்க, தாங்க, போடுங்க, இருங்க,
குடிங்க, சிரிங்க, வைங்க,
படிங்க

# வினைச் சொற்கள் - காலம் கற்பித்தல்

| | | | |
|---|---|---|---|
| குழு 1 - | வரு+வன் | தரு+ வன் | போ+வன் |
| குழு 2 - | ஓடு+வன் | பாடு+ வன் | போடு+வன் |
| குழு 3 - | வெட்டு+வன் | தட்டு+வன் | கொட்டு+வன் |
| குழு 4 - | குடிப்+பன் | அடிப்+பன் | நடிப்+பன் |

நன்றி